முச்சந்தி முரளி



"சுடலை ஞானம் வாற மாதிரி உவருக்கு லெக்சன் ஞானம் வந்திருக்கு போல"


Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 256

வியாழக்கிழமை
08 ஒகஸ்ட் 2024

ஆடி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055




யுத்தம் இல்லாத காரணத்தால்

# மதப்பிரச்சினையை ஏற்படுத்த வடக்கிலும், தெற்கிலும் சதி!

## முப்படைகள் முன்னிலையில் அநுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, ஒகஸ்ட் 8

யுத்தத்தால் நீண்டகாலமாக தங்களின் அரசியல் இருப்பை உறுதிப்படுத்திக்கொண்ட ரணிலும் மஹிந்தவும், யுத்தம் இல்லாமல் போனதால் இப்போது சோர்வடைந்திருக்கின்றார்கள். இதனால்தான் அவர்கள் மீண்டும் ஒரு மதப் பிரச்சினையை ஏற்படுத்த வடக்கிலும் தெற்கிலும் முயற்சிகளை மேற்கொள்கின்றனர் என்று ஜே.வி.பி.யின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

11

முல்லைத்தீவில்

## மின்சாரம் தாக்கி சிப்பாய் இறப்பு!

முல்லைத்தீவு, ஓக. 8

மின்தாக்குதலுக்கு உட்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவர், பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு - கேப்பாபிலவு பகுதியில் உள்ள இராணுவ முகாமில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. சிப்பாயின் இறப்புத் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-19)



## மீளக் குடியமர்ந்தவர்களின் தேவைப்பாடுகள் ஆராய்வு!

யாழ்ப்பாணம், ஓக. 8

இந்தியாவிலிருந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்குக் கிடைக்கவேண்டிய சேவைகள் தொடர்பான கலந்தாய்வு நேற்றுப் புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில்

11

## மருத்துவர் அர்ச்சுனா பிணையில் விடுதலை

மன்னார், ஓக. 8

மன்னாரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மருத்துவர் அர்ச்சுனா நேற்றையதினம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மன்னார் பொது மருத்துவமனைக்குள் நுழைந்து குழப்பத்தை ஏற்படுத்தியதாக மன்னார் மருத்துவமனை

11

## கொடுக்குளாயில் வீடு தீக்கிரை!

யாழ்ப்பாணம், ஓக. 8

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு, கொடுக்குளாய் ஆழியவளையில் நேற்றுமுன்தினம் இரவு வீடொன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

தபால் நிலையமொன்றில் ஊழியராகப் பணியாற்றும் குடும்பத்தலைவரின் வீடே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. வீட்டிலிருந்தவர்கள் வீட்டைவிட்டு வெளி

11

## கைகலப்பில் ஈடுபட்ட இருவருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், ஓக. 8

நபரொருவர் மீது கண்மூடித்தனமாக தாக்குதலை மேற்கொண்டமைக்காக இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணம் - கொக்குவில் பகுதியைச் சேர்ந்த நபர், பிரான்ஸ் செல்வதற்காக 25 இலட்சம் ரூபா பணத்தினை நீர்கொழும்புப் பகுதியில் வசிக்கும் ஒருவரிடம் வழங்கியுள்ளார். பணத்தை வழங்கியவர் சிங்கப்பூர் வரையில் அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் ஏமாற்றப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். இதையடுத்து பணத்தைக்

11



நல்லூர்ப் பெருந்திருவிழா

## செம்மணியில் இன்று சேவற்கொடி பறக்கும்

யாழ்ப்பாணம், ஓக. 8

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவப் பெருந் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்ப

11

## சென்னை – யாழ்ப்பாணம் புதிய விமான சேவைகள்!

சென்னை – யாழ்ப்பாணம் இடையே, புதிய விமான சேவைகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விரிவு - பக்.03



## வடக்கு - கிழக்கு அதிகாரிகள் அபிவிருத்திக்குப் பின்னடிப்பு!

யாழ்ப்பாணத்தில் வைத்து விஜயதாஸ தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 8

வடக்கு - கிழக்கு அதிகாரிகள் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை. வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் 50 வீதமான நிதி திரும்பி வருகின்றமைக்கு இதுவே காரணம் என்று ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரும், முன்னாள்

11

## பொன்சேகா வியூகம் நாளை வெளியாகும்

கொழும்பு, ஓக. 8

ஜனாதிபதித் தேர்தலின் வேட்பாளர்களில் ஒருவரான சரத் பொன்சேகா, தனது அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பில் நாளை வெள்ளிக்கிழமை தெரிவிக்கவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு கட்டுப் பணம் செலுத்திய பின்னர் புதுடில்லிக்குச்

11



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நாட்டில் அதிகரிக்கும் சிறுவர் வன்கொடுமை

## 6 மாதங்களில் 4,380 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக.8

**நடப்பாண்டின் முதல் ஆறு மாதங்களில் மாத்திரம் மொத்தமாக 4,380 சிறுவர் துஷ்பிரயோகங்கள் பதிவாகியுள்ளன என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.**



அறிக்கையின் பிரகாரம் அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில், ஆயிரத்து 332 வரையான சிறுவர்கள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு தேவையுடையவர்களாக உள்ளனர். ஆயிரத்து 16 சிறுவர்கள் கொடுமைக்குள்ளாகியுள்ளனர் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

290 சிறுவர்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது டன் 70 சிறுவர்கள் தொடர்பில் புறக்கணிப்பு அல்லது கொடுமைக்குள்ளாகுவது தொடர்பில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. காயம் ஏற்படுத்தியது தொடர்பில் 90 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் 157 முறைப்பாடுகளும், கடுமையான காயங்களை ஏற்படுத்துவது தொடர்பில் 119 முறைப்பாடுகளும் சிறுவர்களை யாசகத்துக்காக பயன்படுத்துவது தொடர்பில் 121 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

# ஒற்றையாட்சியில் பயணிப்பேன்

### நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 8

ஒற்றையாட்சியை பாதுகாத்து நாட்டை வெற்றியடைய செய்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மக்கள் மற்றும் கொள்கைகள்மீது எமக்கு நம்பிக்கை உள்ளது. சவால்மிகு தருணத்திலேயே இளைஞர்களின் தலைமைத்துவம் தேவை. அந்த பணியை நான் செய்வேன்.

எனது வெற்றிதான் கட்சியின் வெற்றி, கட்சியின் வெற்றிதான் இந்நாட்டின் வெற்றி. ஜனாதிபதி தேர்தலில் எமது கட்சி நிச்சயம் வெற்றிபெறும். ஒற்றையாட்சியை பாதுகாத்து நாட்டை வெற்றியடையச்செய்வேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# ஐ. ம. சக்தியுடன் தயாசிறி கூட்டணி

### ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, ஓக.8

ஐக்கிய மக்கள் சக்தியுடன் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தலைமையிலான புதிய கூட்டணி நேற்று ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

பத்தரமுல்லையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. தயாசிறி ஜயசேகர தலைமையிலான கூட்டணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டது. (ச-இ)

# பெரமுன வேட்பாளராக நாமல் அறிவிக்கப்பட்டார்

கொழும்பு, ஓக.8

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்கும் நிகழ்வு பெரமுனக் கட்சி தலைமையகத்தில் நேற்று காலை நடைபெற்றது.

கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ச, ஸ்தாபகர் பஸில் ராஜபக்ச, பொதுச்செயலாளர் சாகர காரியவசம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சிச் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். சுபவேளையில் கட்சி வேட்பாளரின் பெயரை கட்சிச் செயலாளரான சாகர காரியவசம் அறிவித்தார்.

2020 ஆம் ஆண்டிலேயே கோத்தாபய ஆட்சியில் அவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது. அண்மையில் மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்நிலையிலேயே தற்போது ஜனாதிபதி வேட்பாளராகவும் அவர் களமிறக்கப்பட்டுள்ளார். (ச-44)



# தமிழ்ப் பொதுவேட்பாளர் நேரம் வீண்விரயம்

### கூறுகிறார் பிள்ளையான்

கொழும்பு, ஓக.8

வடக்கு, கிழக்கில் நடைமுறைச் சாத்தியமற்ற தீர்மானங்களுக்காக சில தலைவர்கள் நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ் பொதுவேட்பாளர் விவகாரமும் அவ்வாறு நேரத்தை வீணடிக்கும் செயற்பாடே.

-இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு அதிகாரப் பரவலாக்கலிலும் அவதானம் செலுத்தக் கூடிய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே. தேர்தலின் பின்னர் தன்னால் முடிந்த வரை மாற்றங்களை ஏற்படுத்துவதாகக் கூறியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# ஐ.எம்.எப். ஒப்பந்தங்கள் பிசகினால் பின்னடைவு

### அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கொழும்பு, ஓக.8

சர்வதேச நாணயநிதியத்துடன் தற்போது நடைமுறையில் உள்ள கடன் ஒப்பந்தம் தேர்தல் அல்லது ஏனைய விடயங்களைப் பொருட்படுத்தாது 2027 வரை செயற்படவேண்டும் என்று அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்னும் சில மாதங்களில் இந்த நாட்டின் ஜனாதிபதியாக யார் வந்தாலும் சரி கடன் ஒப்பந்தத்தில் மாற்றம் ஏற்படுத்தினால் 2025ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தை உருவாக்க முடியாத நிலை ஏற்படும்.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு சர்வதேச நாணயநிதியம் 700 மில்லியன் அமெரிக்க டொலரும் உலக வங்கி 400 மில்லியன் அமெரிக்க டொலரும் ஆசிய அபிவிருத்தி வங்கி 300 மில்லியன் அமெரிக்க டொலரும் வழங்குவதாக உறுதியளித்துள்ளன - என்றார். (ச-இ)

# குகதாசன் கன்னி உரை

கொழும்பு, ஓக. 8

மறைந்த பெருந்தலைவர் இரா.சம்பந்தனின் வெற்றிடத்துக்குத் திருகோணமலை மாவட்டத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட சண்முகம் குகதாசன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தனது கன்னி உரையை நாடாளுமன்றத்தில் ஆற்றினார்.

கையகப்படுத்தப்பட்ட நிலத்தை நெற்செய்கைக்குப் பயன்படுத்துவது, திருகோணமலை மாவட்டத்து விவசாயிகள், மீனவர்கள் உட்பட அரச அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை உள்ளடக்கித் தனது முதலாவது உரையை அவர் நாடாளுமன்றத்தில் நிகழ்த்தினார். (ஒ-66)

# சஜித் ஆட்சியில் மத்தும பண்டார பிரதமர்?

கொழும்பு, ஓக.8

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் தரப்பு வெற்றியீட்டினால், பிரதமர் பதவி ரஞ்சித் மத்துமபண்டாரவுக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் பதவி குறித்து தற்பொழுது கட்சியில் பேச்சுகள் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அந்தவகையில் கட்சியின் பொதுச்செயலாளராக கடமையாற்றிய ரஞ்சித் மத்துமபண்டார பிரதமர் பதவிக்குத் தெரிவு செய்யப்படுவார் என்றும் கூறப்படுகிறது. (ச-இ)

# சென்னை - யாழ்ப்பாணம் புதிய விமானசேவை

## இண்டிகோ எயார்லைன்ஸ் அறிவிப்பு



**கொழும்பு, ஓக.8**
**சென்னை - யாழ்ப்பாணம் இடையே புதிய விமான சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக இண்டிகோ எயார் லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.**

இந்த விமானசேவை செப்ரெம்பர் 1 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விமானசேவை சென்னையிலிருந்து நாள்தோறும் பிற்பகலில் யாழ்ப்பாணத்துக்கு இடம்பெறவுள்ளது.

இதற்கமைய சென்னை விமான நிலையத்தில் இருந்து பிற்பகல் 1.55 மணிக்கு புறப்படும் இண்டிகோ எயார்லைன்ஸ் விமானம், பி.ப. 3.10 மணிக்கு யாழ்ப்பாணம் விமான நிலையத்தை வந்தடையும். பி.ப. 3.55 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு மாலை 5.10 மணிக்கு மீண்டும் சென்னை விமான நிலையத்தை வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை அலையன்ஸ் எயார் நிறுவனத்தின் யாழ்ப்பாணத்துக்கான விமானசேவை திங்கள், செவ்வாய், வியாழன், சனி என வாரத்தில் 4 நாள்கள் காலைவேளையில் இயக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# இந்தோ-இலங்கை வர்த்தக ஒப்பந்தம்

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஓக.8
இந்தோனேஷியா - இலங்கை முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தோனேஷியா - இலங்கை முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுகளை எதிர்வரும் டிசெம்பருக்குள் முடித்து, 2025 மார்ச்சில் வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு இரு தரப்பினரும் இணங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



## அடுத்த வாரம்

# கனமழைக்கு வாய்ப்பு

முல்லைத்தீவு, ஓக.8
எதிர்வரும் 10ம் திகதி நண்பகலுக்குப் பின்னர் இலங்கையின் தென்கரையோரத்தை அண்மித்த வங்காள விரிகுடாவில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி ஒன்று உருவாகவுள்ளது.

இதனால் எதிர்வரும் 11ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்று வானியலாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அதேவேளை தற்போது வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கிடைக்கும் மேற்காவுகை மழை எதிர்வரும் 11ஆம் திகதிவரை தொடரும் வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச-555)

# வெளிமாவட்ட நியமனம்; மறுக்கும் 462 பேர்

கொழும்பு, ஓக. 8
புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களில் 462 பேர் வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கு மறுப்புத்தெரிவித்துள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்துள்ளார்.

வவுனியா, பதுளை மாவட்டங்களுக்கு நியமனம் பெற்ற பட்டதாரிகள் நியமனம் வழங்கப்பட்டு 14 நாள்களாகியும் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை எனவும் இவர்களின் இடத்துக்கு பட்டியலில் அடுத்த நிலையில் உள்ள ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குமாறு உத்தரவிட்டுள்ளதாகவும் கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார். (ஒ-6)



# துப்பாக்கிச்சூடு இருவர் காயம்

கொழும்பு, ஓக.8
இருவேறு இடங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயமடைந்துள்ளனர்.

கம்பஹா தம்மிட்ட பிரதேசம் மற்றும் ஜா- எல ஆகிய பகுதிகளில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பதிவாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# மதுபானசாலைகளுக்கான அனுமதி; விண்ணப்பம் கையேற்பு நிறுத்தம்

கொழும்பு, ஓக. 8
மதுபானசாலை அனுமதி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வதை இடை நிறுத்துமாறு உயர்நீதிமன்றம் மதுவரித்திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

மதுபானசாலை உரிமையாளர்கள் சிலர், மதுபானசாலை அனுமதி விண்ணப்பங்களை மதுவரித்திணைக்களம் பெற்றுக்கொள்வதை இடை நிறுத்துமாறு தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை தொடர்ந்தே உயர்நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (ஒ-6)

# புதினம் தெரியுமோ?

ஒருமாதிரி மன்னார் ஆஸ்பத்திரி வழக்கில டாக்குத் தர் அர்ச்சுனாவை பிணையில விட்டிட்டினம். என்னதான் அர்ச்சுனா, அநியாயமாச் செத்த ஒரு இளம் தாயான சிந்துஜாவுக்கு நீதி கேக்கப் போயிருந்தாலும், தன்ர வழக்கமான போனில வீடியோ எடுக்கிற வித்தையை இஞ்சையும் காட்ட வெளிக்கிட்டதுதான் இவ்வளவு சிக்கலுக்கும் காரணம். சிந்துஜாவுக்கு நீதி கிடைக்க போராட வேணும் எண்டு அர்ச்சுனா நினைச்சிருந்தால், அவர் அண்டைக்கு ஆஸ்பத்திரிக்குள்ள போகாமல், வெளியில நிண்டு போராடியிருந்தால், அவரோட சேர்ந்து ஆயிரக்கணக்கான சனமும் இரவிரவா நிண்டு நீதி கேட்டிருக்கும். ஆனால் விலாசம் காட்ட வெளிக்கிட்டு, தன்னோட நாலைஞ்சு யூரியுப்பர் களையும் கூட்டிக் கொண்டு போய், பிள்ளைப்பேறு வார்ட் மட்டும் வீடியோ எடுத்துக்கொண்டு போய் , நீதி கேக்க நினைச்சால், அது சட்டப்படி குற்றம்தான். அதாலதான் சிந்துஜாவுக்காக நீதிகேக்கப் போன டாக்குத்தரை, ஆஸ்பத்திரி நிர்வாகம் வழக்குப்போட்டு சிறைக்குள்ள அடைக்க முடிஞ்சது.

இதேமாதிரி விவேகம் இல்லாமல், தான் நினைச்சபடி நடந்ததாலதான் டாக்குத்தர் அர்ச்சுனா சாவகச்சேரி ஆஸ்பத்திரி விசயத்திலையும் வழக்கில மாட்டுப்பட்டவர். அதுக்குப் பிறகாவது அவர் கொஞ்சம் யோசிச்சு, நீதிக்காகவும், மருத்துவ மாபியாக்களுக்கு எதிராகவும் போராடியிருந்தால் அவருக்கு இருக்கிற சனத்தின்ர ஆதரவை வைச்சு நிறையச் சாதிக்கலாம். ஆனால் அர்ச்சுனா தன்ர பப்ளிசிட்டியை மட்டும் விரும்பிறார் போல கிடக்கு. அதாலதான் அக்கிரமங்களைத் தட்டிக்கேக்கிறன் எண்டிட்டு, ஆஸ்பத்திரியளுக்குள்ள அடாத்தா நுழைஞ்சு வம்படியா கேஸ்களில மாட்டுப்படுறார்.

எண்டாலும் எப்பிடி சாவகச்சேரி ஆஸ்பத்திரியின்ர சீரழிவு வெளில வாறதுக்கு அர்ச்சுனா காரணமா இருந்தாரோ, அதேமாதிரி மன்னார் ஆஸ்பத்திரியில செத்த சிந்துஜான்ர விசயமும் வெளியில இந்தளவு பெரிசா சனத்துக்கு தெரியவந்ததுக்கும், அங்க உடனடியாக விசாரணை நடக்கிறதுக்கும் அர்ச்சுனா அங்க போனதும் ஒரு காரணம்தான். இந்த உண்மையை ஒத்துக்கொள்ளத்தான் வேணும். அர்ச்சுனா போனவிதம் தான் பிழையே தவிர, அவரின்ர நோக்கம் பிழையில்லை. ஆனால் அர்ச்சுனா ஏதோ உலகத்திலேயே இல்லாத குற்றம் செய்திட்டார் எண்டமாதிரி, கறுப்புக்கோர்ட் போட்ட 22 பேர் ஓடிப்போய் ஆஸ்பத்திரிக்காரருக்கு வக்காலத்து வாங்கி, அர்ச்சுனாவுக்கு பிணை குடுக்கக்கூடாது எண்டு ஒற்றைக்காலில நிண்டிருக்கினம். அதாலதான் முதல்நாள் அர்ச்சுனாவுக்கு பிணை குடு படேலை. இத்தனைக்கும் அந்த 22 கறுப்புக் கோர்ட் போட்டவைக்கு தலைமை தாங்கினவர் "சிந்துஜா வுக்கு நீதி கிடைக்கோணும், மருத்துவர்களை தண்டிக்கோணும்" எண்டு தன்ர பேஸ்புக்கில முதல் நாள் முழுக்க சிலம்பமாடினவர். அப்பிடி பேஸ்புக்கில எழுதிப்போட்டு, பிறகு அதே நீதியைக் கேட்ட அர்ச்சு னாவுக்கு பிணை குடுக்கக் கூடாது எண்டு தன்னோட 21 பேரையும் இழுத்துக் கொண்டு போன வரெண்டால் பாருங்கோவன். படிக்கிறது தேவாரம் இடிக்கிறது சிவன் கோயில் எண்டுறது உதைத்தான் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

## CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA

**Vacancy**

Applications are invited from qualified candidate for the post of **Teacher of Biology.**

**Requirements**

- Should possess a degree in the relevant field.
- Should be able to teach Biology for A/L English Medium and Tamil Medium classes.

Salary is negotiable and will commensurate with qualification and experience.

Apply before 15th August 2024 with the names of two non-related referees.

Only shortlisted candidates would be called for an interview.

**Principal**
**Chundikuli Girls' College**
**Jaffna.**
E-mail: forwardcgc@yahoo.com

(CR/43088) J-1


## மரண அறிவித்தல்

பிறப்பு 14 04 1948



இறப்பு 06 08 2024

## திருமதி மேரி திரேசா தங்கநாயகம்

[ யோகமணி ரீச்சர் ] இளைப்பாறிய ஆசிரியை

**யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம், ( கிளிநொச்சி மகா வித்தியாலயம், கொழும்புத்துறை சென் யோசப் மகா வித்தியாலயம், நுகேகொட தமிழ் வித்தியாலயம்)**

யாழ்ப்பாணம் குருசோல்ட் வீதியைப் பிறப்பிடமாகவும், வளன்புரத்தை வசிப்பிடமாகவும், தற்போது வெள்ளவத்தை கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.மேரி திரேசா, தங்கநாயகம் (யோகமணி) அவர்கள் செவ்வாய்க் கிழமை, 06.08 2024 அன்று காலமானார். "யோகமணி ரீச்சர்" என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட இவர் காலஞ் சென்றவர்களான வரப்பிரகாசம் செபஸ்தியம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ் சென்றவர்களான மனுவல்பிள்ளை, ஆசானம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மனுவல்பிள்ளை தங்கநாயகம் அவர்களின் ஆருயிர் மனைவியும், லெஸ்லி, லக்ஷி (முன்னாள் இலங்கை வங்கி அலுவலர்), பியோமி. ஆகியோரின் பாசமிகு தாயாரும், கேஷினி (ஆசிரியை, சென் பிறிஜெற் கன்னியர் மடம் கொழும்பு- 07), ரமேஷ்மோகன் ( முன்னாள் ஆசிரியர் - சென். பெனடிக்ற் கல்லூரி கொழும்பு-13), பிரசன்னா ஆகியோரின் அன்பு மாமியாரும், ரெபேக்கா, ரெஜினோல்ட், ரேக்கா, டேஷானி, எய்டன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். மேலும் இவர், மேரி மாகிறெட் (குணமணி) அருட்தந்தை. பிரான்சிஸ் டானியேல் (அ.ம.தி), அருட்சகோதரி. மேரி சிப்பிறியன் ( திருக்குடும்பக் கன்னியர் மடம், இளவாலை, காலஞ்சென்ற மேரி மக்டலின் யோசப், அருள் எட்மண்ட், மேரி பத்மராணி லியோ (ஜெயமணி), காலஞ்சென்ற வின்சன்ட் லோகேந்திரன் (லோகா), மேரி நவமலர் புவனேந்திரன் (நவமணி), லெஸ்லி ஜோன்சன், மேரி மாசில்லா நாகேந்திர ராஜா, அன்ரன் இருதயராஜ் (ராஜி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அமிர்தநாயகம், மெற்றில்டா (பவளம்) கனகநாயகம், பேரின்பநாயகம், காலஞ்சென்றவர்களான: சவுந்தரநாயகம், பியற்றிஸ் செல்வநாயகம் (மலர்), ஆனந்தநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் வியாழக்கிழமை பின்னிரவு கொழும்பிலிருந்து, இல. 985/16, 2ம் ஒழுங்கை, வளன்புரம் கொழும்புத்துறையில் அமைந்துள்ள அவரது இல்லத்திற்கு 9.8.2024 வெள்ளிக்கிழமை அதிகாலை எடுத்து வரப்பட்டு பிற்பகல் யாழ் மரியன்னை பேராலயத்தில் 3.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் புனித மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அறியத் தருகின்றோம்.

தகவல் : லெஸ்லி 94767 506 264 (மகன்) பியோமி : 447470574949 (மகள்)
லக்ஷி : 61403663620 (மகள்) கேஷினி : 0773570522 (மருமகள்)

## கண்ணீர் அஞ்சலி

### இன்பநாதன் கிறிஸ்தீனம்மா



பிறப்பு 19.04.1933 இறப்பு 02.08.2024

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்

பிரிவால் துயருறும்
பேரன் சுதர்சன் (பிரான்ஸ்)
திருமதி யோ. திரேசா வைலற் (பேபி)

(CS/1088) J-1

# மரண அறிவித்தல்



## உமாகாந்தன் வனஜா

### (வனஜா)

(செயலாளர் - ஏழாலை மேற்கு,
ஸ்ரீ விநாயகர் ஐக்கிய நாணய சங்கம்)

ஏழாலை மேற்கினை பிறப்பிடமாகவும் "குமரகிரி" ஏழாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உமாகாந்தன் வனஜா கடந்த (03.08.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் - வேதநாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நாகேந்திரம் உமாகாந்தன் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி வி. நந்திதா, திருமதி உ.வர்ஜிதா, காலஞ்சென்ற உ.ராம்சரன் மற்றும் செல்வி உ. மானஷிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், ம. விஜயாலயன், ச. உமாகாந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், செல்வன் வி. ஜமிகன் வேத், செல்வன் உ. இயலிதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பா.பாலமுரளிதரன் (பிரான்ஸ்), பா. பாலசுரேஷ் (சுவிஸ்), பா. பானுகோபன் (லண்டன்), பா. பாலதீபன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2024) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மலர்வு 24.05.1964 உதிர்வு 03.08.2024

குமரகிரி,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 349 2554

(CS/55879) J-1

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இனவாதம் இல்லாத ஜனாதிபதித் தேர்தல்

**நா**ட்டில் தற்போது போர் இல்லை என்பதால் மஹிந்த ராஜபக்சவும், ஜனாதிபதி ரணிலும் சோர்வடைந்துவிட்டனர். அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மீண்டும் ஒரு மதப்பூசலை ஏற்படுத்துவதற்கு வடக்கிலும் தெற்கிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்றவாறாக எச்சரித்திருக்கின்றார் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க. 1999ஆம் ஆண்டுமுதல் 2019ஆம் ஆண்டு வரையான ஜனாதிபதித் தேர்தல்களில் போரையும் பாதுகாப்புப் பிரச்சினைகளையும் மையப்படுத்திய பரப்புரைகளே ஜனாதிபதி வேட்பாளரைத் தீர்மானித்தன என்றும் அநுர தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இனவாதமும் மதவாதமும் வேரூன்றிப்போயுள்ள இலங்கையில், சிங்களத் தலைவர்கள் இவ்வாறான நீதியின்பாற்பட்ட கருத்துகளை வெளிப்படுத்துவதென்பது 'அத்தி பூத்தாற்போல்' அரிதிலும் அரிதான சம்பவங்களே. இவ்வாறிருக்கையில், ஜனாதிபதித் தேர்தலின் பிரதான வேட்பாளராக நின்றுகொண்டு ஒய்வுபெற்ற இராணுவத்தினர் முன்பாக இவ்வாறு தற்றுணிவுடன் கருத்துகளை வெளிப்படுத்தியமைக்காக அநுரவை எத்தனை பாராட்டினாலும் அது தகும். ஏனெனில், அநுரவின் கருத்துகள் இனிவரும் நாள்களில் சிங்கள இனவாதிகளால் சித்தரிக்கப்பட்டும் 'கத்தரிக்கப்பட்டும் திரிபுபடுத்தப்படும் பட்சத்தில், அவருடைய ஜனாதிபதிக் கனவு கலைவதற்கான சாத்தியங்களே அதிகம்.

'தமிழர்கள் ஆயுதங்களைத் தூக்கவில்லை. மாறாக ஆயுதங்களைத் தூக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். தெற்காசியாவின் மிகப்பெரும் நூலகத்தை எரித்தழித்தபோது அவர்களின் இதயங்கள் வெடித்துச் சிதறியிருக்கமாட்டாதா?' என்றும் அநுர இராணுவத்தினரிடம் கேள்விஎழுப்பியிருக்கின்றார். அண்மையில் வடக்குக்குப் பயணம் மேற்கொண்ட அநுர, தமிழர்களுக்குத் தீர்வாக 13ஆவது திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்துவதாகத் தெரிவித்தபோது, பல சிங்களத் தலைவர்கள் அநுரவை விமர்சித்திருந்தனர். 'வடக்கில் வைத்துத் தமிழர்களுக்குச் சார்பாகவும், தெற்கில் வைத்து சிங்களவர்களுக்குச் சார்பாகவும் கருத்துகளைத் தெரிவிக்கும் அரசியல்தான் அநுரவுடையது' என்பதாக அவர்மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆக, இவ்வாறான விமர்சனங்களுக்கும் அநுர இராணுவத்தினருக்கு முன்பாக நின்று கெத்தாக வெளிப்படுத்திய தன் கருத்துகள் மூலம் முற்றுப்புள்ளி வைத்திருக்கின்றார்.

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலானது, சிங்கள மக்களுக்குரிய தேர்தலாகத்தான் இதுகாலமும் இடம்பெற்று வந்திருக்கின்றது. தேர்தலின்போதும் தேர்தலின் பின்னரும் இடம்பெற்ற எண்ணற்ற சம்பவங்களும் 'வரலாறும் அதையே மெய்ப்பிக்கின்றன. அநுர வெளிப்படுத்திய கருத்துகளை சிங்களத் தலைவர்கள் கொஞ்சமும் கிரகிக்காமலும் கொள்கைகளாக வரித்துக் கொள்ளாமையாலும் தான், தமிழர்கள் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை களமிறக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. ஆத்மார்த்தமான மாற்றங்களையே தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர். அதேநேரம், மதத்தாலும், மொழியாலும் பிரிந்திருந்தாலும், நிலத்தால் இணைந்து ஒரே மாகாணத்தவர்களாகபலம்பெற்றிருந்த தமிழர்களை வடக்கு - கிழக்கு எனப் பிரித்தமைக்கான காரணத்தையும், அதன் நியாயப்பாடுகளையும் அநுர வெளிப்படுத்தவேண்டிய காலமும் இதுவே.



# அரசசொத்து துஷ்பிரயோகம் தடுக்க நடவடிக்கை எடுங்கள்

தேர்தல்கள் ஆணைக்குழு பணிப்பு

**கொழும்பு, ஓக.8**

**ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அரச சொத்துகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு, அமைச்சின் செயலாளர்கள் மற்றும் மாகாண பிரதம செயலாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளது.**

அமைச்சின் செயலாளர்கள் மற்றும் மாகாண பிரதம செயலாளர்கள் அந்த நிறுவனங்களின் பிரதான உத்தியோகத்தர்கள் என்பதால் அவர்களுக்கு கீழ் உள்ள நிறுவனங்களில் முறைகேடு நடந்தால் அந்த அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. இதேவேளை, அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் மாகாண செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது. (ச-இ)

## தேர்தல் பரப்புரைகளில் பொலித்தீனுக்குத் தடை

கொழும்பு, ஓக.8

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின்போது பொலித்தீன் பயன்பாட்டுக்குத் தடை விதிக்கப்படவுள்ளது. பொலித்தீன் பயன்பாடு அற்ற பரப்புரை தொடர்பில் வேட்பாளர்களைத் தெளிவுபடுத்தவேண்டுமென சுற்றாடல் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

பரப்புரைகளின்போது பொலித்தீன் பயன்படுத்துவதனால் சுற்றுச்சூழலுக்கு மிகப்பெரிய தீங்கு ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## 'யுக்திய' 750 பேர் கைது

கொழும்பு, ஓக.8

யுக்திய நடவடிக்கையின்கீழ் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புகளில் 26 பெண்கள் உட்பட 750 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

22 சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்படவுள்ளனர். 3 சந்தேகநபர்களின் சொத்துகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளன. என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## தண்ணீர் வசதியின்றி 983 பாடசாலைகள்

கொழும்பு, ஓக.8

நாட்டில் பாதுகாப்பான நீர் வசதி இல்லாத 983 பாடசாலைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனை சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்பான நீர் வசதி இல்லாத 983 பாடசாலைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மின்சார வசதி இல்லாத 15 பாடசாலைகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ச)

## மின்சாரம், எரிபொருள் அத்தியாவசிய சேவை

கொழும்பு, ஓக.8

மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோகம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவைகளாக பிரகட னப்படுத்தி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி மின் விநியோகம், பெற்றோலிய உற்பத்தி, எரிபொருள் விநியோகம் ஆகியன அத்தியாவசிய சேவைகளாகபிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. (ச-இ)

**நாளை**

09.08.2024

**வெள்ளிக்கிழமை - ஆடி - 24**

சுபநேரம் : 06.04 - 07.34

ராகுகாலம் : 10.34 - 12.04

**நாளொரு நல்வார்த்தை**

**மாறவேண்டிய கட்டாயம் வருவதற்கு முன்னாலேயே மாறிவிடுங்கள்**

*ஜாக் வெல்ஷ்*

# விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக 8

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் நடத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ராஜா கிறீம்கவுஸ் மண்டபத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்.மாவட்ட தொகைமதிப்பு ஆணையாளரும், மாவட்ட பதில் செயலருமான மருதலிங்கம் பிரதீபன், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், கணக்காளர்கள் மற்றும் மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ச-25, 9,66)



# நாகசதுர்த்தி வழிபாடு

யாழ்ப்பாணம், ஓக.8

நாக சதுர்த்தியை முன்னிட்டு கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை பி.ப 4 மணிக்கு சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்று விநாயகப் பெருமாள் வீதிஉலா வருவார். (ச-25,17)



# அரச அங்கீகாரம்பெற்ற மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம்

யாழ்ப்பாணம், ஓக.8

அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளராக திருமதி சியாமினி தவபாலன் கடந்த மாதம் மல்லாகம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சிங்கள - தமிழ் மற்றும் ஆங்கில - தமிழ் மொழிகளுக்கிடையிலான மொழிபெயர்ப்பாளராக அரச அங்கீகாரத்தைப் பெற்றுள்ள இவர் தமிழ் - சிங்கள மொழிகளுக்கான உரைபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்ப்புப் பணிகளை ஆற்றி வருவதோடு இரண்டாம் மொழி சிங்களம் மற்றும் தமிழ்மொழி கற்பித்தலுக்கான அரச அங்கீகாரம் பெற்ற வளவாளராகவும் விளங்குகின்றார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலைமாணிப் பட்டம் பெற்ற இவர் களனிப் பல்கலைக்கழகத்தில் மொழிபெயர்ப்பு டிப்ளோமா கற்கைநெறியை நிறைவுசெய்துள்ளார்.

கடந்த 2008ஆம் ஆண்டில் பண்டிதர் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த இவர் தற்போது யாழ்.பல்கலைக்கழகத்தில் பண்டித கற்கைநெறி வருகை விரிவுரையாளராகவும் கடமையாற்றி வருகின்றார். (ச)

# நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஓக.8

மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியினரின் ஏற்பாட்டில், அமெரிக்க மிஷனரியின் அருட்கலாநிதி ஜெயராம் எழுதிய 'இவன் உனக்காக காதலின் உச்சம்' எனும் நூலின் அறிமுக நிகழ்வு மருதனார்மடம் இறையியல் கல்லூரி கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-25)

# சிந்தனைக்களம்!

யாழ்ப்பாணம், ஓக. 8

வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் 'சிந்தனைக் களம்' நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற உள்ளது.

விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறையில் உள்ள வடமராட்சி ஊடக இல்லத்தின் அலுவலகத்தில் சமகால அரசியல், சமூக நிலைமைகளும் சமூகவலைத்தளங்களின் செயற்பாடும் என்ற தலைப்பில் இடம்பெற உள்ள சிந்தனைக் களம் நிகழ்வில் மூத்த பத்திரிகையாளரும் ஊடக விரிவுரையாளருமான அ.நிக்சன் பங்கேற்று கருத்துரை நிகழ்த்த உள்ளார்.

அரசியல், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட ஆர்வலர்களை சிந்தனைக்களம் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ-100)



# கசிப்பு விற்பனை; இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஓக.8

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை பகுதியில் கசிப்புக் காய்ச்சி விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞனே கைதுசெய்யப்பட்டார்.

இதன்போது 227 போத்தல் கோடாவும் கசிப்புக் காய்ச்சும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர் கொழும்புத்துறையிலும் வட்டுக்கோட்டையிலும் வீடுகளை வாடகைக்கு எடுத்து கசிப்புக் காய்ச்சி விற்பனையில் ஈடுபட்டாரென விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-26)

# மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஓக.8

விசேடதேவையுடைய மாணவர்களுக்கான மருத்துவ முகாம் பளை மத்திய கல்லூரியில் நேற்றுப்புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் மருத்துவர் அருமைத்துரை, நிதிப் பங்காளர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-25, 113)

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக.8

யாழ். சில்லாலை சாந்தை விநாயகர் முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழாவின் சந்தை நிகழ்வு சனசமூகநிலையத் தலைவர் இ. லிபோஜன் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை நிலைய முன்றலில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திருமதி ஏனெஸ்ட். சண்முகநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (ச-25, 63)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சி தரும். உடல் ஆரோக்கியம் மேம்படும். வியாபாரத்தில் விற்பனைகூடுதலாக இருக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். செலவுகளால் கையிருப்பு குறையும். மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சங்கடங்கள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். துணிச்சலுடன் முடிவெடுப்பீர்கள். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். அம்பிகை வழிபாடு அளவற்ற மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். சகோதரர்களால் வீண் செலவுகள் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பும் சிலருக்கு ஏற்படும். இலாபம் குறைவாகத்தான் இருக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் தேவை. விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. பணஉதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சக வியாபாரிகளால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளின் உடல்நலனில் கவனம் தேவை. வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். மனதில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்படும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவு செய்ய நேரிடும். மற்றவர்களுடன் வீண் விவாதத்தில் ஈடுபட வேண்டாம். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம் :** மனதில் குழப்பங்கள் நீங்கி உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும்.

**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். தாய்வழி உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். கருத்து வேறுபாடு நீங்கும்.

**மகரம்:** திடீர்ச் செலவுகளும் ஏற்பட்டு திணறவைக்கும். காரியங்கள் முடிவதில் இழுபறி நிலை காணப்படும். வெளியூர்ப் பயணம் தவிர்க்கவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். உங்கள் பொறுப்புகளை வாழ்க்கைத்துணை பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு சகோதரர்களால் எதிர்பாராத செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு. சுபநிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். ஆதாயம் கிடைக்க வாய்ப்புள்ளது.

## தோல்வி அச்சத்திலேயே கட்சியை விட்டுத் தாவல்

### இந்திக்க தெரிவிப்பு



கொழும்பு, ஓக.8
தேர்தல் தோல்விக்கு அஞ்சுபவர்களே கட்சித் தாவலில் ஈடுபட்டு வருகின்றனர் என்று பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட அமைப்பாளர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

அரசியல் லாபம் கருதி பொதுஜன பெரமுனவில் இருந்து பலர் கட்சித்தாவல்களில் ஈடுபட்டுள்ள போதிலும் கட்சியின் ஆதரவாளர்கள் ஒருபோதும் விலகிச் செல்லமாட்டார்கள். ஒரு சிலரின் செயற்பாடுகளினாலேயே பொதுஜன பெரமுன இன்று இவ்வாறான ஒரு நிலையை எதிர்கொண்டுள்ளது. தேர்தல் வெற்றி தொடர்பில் பலர் இன்று விமர்சிக்கின்றனர். எத்தகைய விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் மக்கள் ஆதரவு பொதுஜன பெரமுனவுக்கே உள்ளது.

பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்தால் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகளுக்கு அமையவே செயற்படவேண்டும். தேர்தல் தோல்விக்கு அஞ்சுபவர்களே இன்று கட்சிதாவலில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## மஹிந்த கூற்றுப்படியே ரணிலுக்கு ஆதரவு!

### பிரசன்ன தெரிவிப்பு

கொழும்பு, ஓக.8
கட்சியின் உறுப்பினரை வேட்பாளராக அறிவிப்பதாக இருந்தால் சுயாதீனமாகத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளுங்கள் என்று மஹிந்த ராஜபக்ச எம்மிடம் குறிப்பிட்டார். அதற்கமைவாகவே ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கினோம்.

-இவ்வாறு வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்னரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உறுதியாக இருந்தார். ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்தை எடுக்காவிட்டால் தனிப்பட்ட முறையில் தீர்மானம் எடுத்துக்கொள்ளுங்கள் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச எம்மிடம் குறிப்பிட்டார். அதற்கு அமையவே ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்கத் தீர்மானித்தோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## வடக்கு மக்களின் வாக்கு சஜித்துக்கே

கொழும்பு, ஓக. 8
ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கு மக்கள் மற்றும் கட்சிகளின் ஆதரவு சஜித் பிரேமதாஸவுக்கே கிடைக்கப்பெறும் என்று அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டால் அது ஐக்கிய மக்கள் சக்திக்கு சவாலாக அமையுமா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலின்போது அங்குள்ள மக்கள் பொதுவானதொரு முடிவையே எடுப்பார்கள், எனவே, வடக்கு அரசியல்வாதிகளும், மக்களும் ஐக்கிய மக்கள் சக்திக்கே ஆதரவு வழங்குவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## ஐ.தொ.முன்னணி ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, ஓக.8
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுக்கு ஆதரவளிப்பதற்கு ஐக்கிய தொழிலாளர் முன்னணி தீர்மானித்துள்ளது என்று அதன் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான அருணாசலம் அரவிந்தகுமார் தெரிவித்துள் ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆராய்ந்து, இந்நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்லக்கூடிய தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு நாம் தீர்மானித்தோம்.

பெருந்தோட்டத் தொழிலா ளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் நாம் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினோம். அதற்குத் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கக் கூடிய வகையில் தீர்வு கிட்டும் என உறுதியளித் துள்ளார் எனவும் அரவிந்தகுமார் மேலும் குறிப்பிட் டார். (ச-இ)

ANGEL INTERNATIONAL SCHOOL
MANIPAY

வடமராட்சி மாணவர்களின் நலன் கருதி, நெல்லியடிச் சந்தியில் இருந்து மானிப்பாயில் உள்ள நமது பிரதான பாடசாலைக்கு பேருந்து சேவையை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம்.

நெல்லியடிச் சந்தி - ஆவிரங்கால் சந்தி -
புத்தூர்ச் சந்தி - நிலாவரை - பாசிவன் சந்தி -
கோப்பாய் கிருஸ்ணன் கோவிலடி - உரும்பிராய்-
மருதனார்மடம் - மானிப்பாய்



மேலதிக தகவல்களிற்கு : 077 844 80 20 / 021 225 5628

## கிளி. தெற்கு கிராமங்களுக்கு ஆரம்பப் பாடசாலைகள் அமைத்துத் தாருங்கள்

கிளிநொச்சி, ஓக.8
கிளிநொச்சி தெற்கு வலயத்தில் சிறார்களின் கல்வியை கருத்தில் கொண்டு புதிதாக ஆரம்பப் பாடசாலைகள் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அன்புபுரம், கந்தபுரம், உதயநகர் ஆகிய கிராமங்களில் இருந்து ஆரம்பப் பிரிவு மாணவர்கள் நீண்ட தூரம் சென்றே கல்வி பயில வேண்டியுள்ளது. மூன்று கிராமங்களிலும் ஆரம்பப் பாடசாலைகள் இல்லாமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றும் பெற்றோர் சுட்டிக்காட்டினர்.

(ச-25,13)

## புகைச்சான்றிதழ் பெறுமிடத்தில் காப்புறுதிப்பத்திரமும் பெறலாம்

வாகன புகை உமிழ்வு சான்றிதழ் பெற்ற பின்னர் அதே இடத்தில் இருந்து காப்புறுதி மற்றும் வாகன அனுமதிப் பத்திரம் பெறத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அடுத்த இரண்டு மாதங்களுக்குள் நாடளாவிய ரீதியில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் -இவ்வாறு போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சு, கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மத்திய சுற்றுச்சூழல் ஆணைக்குழு ஆகியவை இணைந்து அடுத்த 6 மாதங்களுக்குள் வளி மாசடைவதை அளவிடும் நிலையங்களின் எண்ணிக்கையை நூறாக உயர்த்த தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளன. இந்தத் தரவுகள் அனைத்தையும் ஒரே இடத்துக்குக் கொண்டு வருவதற்கும், உலகில் எங்கிருந்தும் எந்தவொரு குடிமகனுக்கும் புகை உமிழ்வு நிலைமைகளை ஒன்லைனில் நேரடியாகப் பார்ப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ஒ-6)

கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
14
04
1944



இறப்பு
05
08
2024

கார்த்திகேசுஐயர் கோமதிஅம்மா

நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பிரதம குரு சிவஸ்ரீ கா.புவனேஸ்வரக் குருக்களின் பாசமிகு தாயார் காலமானதையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கர்ணந்தோட்டக் கந்தனை பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை,
இராஜகோபுர திருப்பணிச்சபை.

CS/55240) J-1



## அரகலயவினர் கேட்டதை நாம் வழங்கியுள்ளோம்!

### மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஓக.8
அரகலயக்காரர்கள் இளம் தலைவரையே கோரினார்கள், அந்த இளம் தலைவரை நாம் எமது கட்சி ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கியுள்ளோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப்பட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாமல் ராஜபக்ச பலமான வேட்பாளர், எனது அரசியல் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு சொல்கின்றேன், தேர்தலில் அவர் நிச்சயம் வெற்றி பெறுவார். அரகலயக்காரர்கள் இளம் தலைவர்களைக் கோரினர், அந்தத் தலைவரை நாம் வழங்கியுள்ளோம், எனவே, இளைஞர்கள் ஒத்துழைப்புடன்செயற்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-44)

ஓம் விராட்விஸ்வப்பிரமனே நமஹ

முதலாம் ஆண்டு நினைவு நாள்

திதி–ஆடி பூர்பபக்க சதுர்த்தி

கடந்த 21.07.2023 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

அமரர் பிறேமச்சந்திரன் லங்காதேவி (லங்கா)

மண்ணில் 01.02.1955
விண்ணில் 21.07.2023



எங்கள் அன்புத் தெய்வம் அம்மா!
ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்களுடன் கூடி வாழ்ந்த காலங்கள்
என்றும் பசுமையானவை
உங்கள் வழிகாட்டல்கள்
எங்களை வழிநடத்தும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்!

இல 44/6 கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
076 245 6244

(CS 1904) V-1



கிளிநொச்சி மத்திய கல்லூரியின் 2026 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் சுற்றாடலை அழகுபடுத்தும் பணியில் கடந்த வாரம் ஈடுபட்டனர். (ச–25,13)

## எல்லைதாண்டி மீன்பிடி

# விளக்கமறியலில் 22 இந்திய மீனவர்

கொழும்பு, ஓக. 8

எல்லைத்தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 22 பேருக்கும் இந்த மாதம் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டு விசைப்படகுகளுடன் இந்திய மீனவர்கள் 22 பேர் நேற்றுமுன்தினம் இரவு குதிரைமலைப் பகுதியில் வைத்து கற்பிட்டி கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்களை புத்தளம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டது. (ச–இ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 8

நாரந்தனை வடக்கு, பண்டாரப்புலம் திருப்பதி தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு, சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மாலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க. கயிலைவாசன் 'சைவ வாழ்வியலில் திருவாசகம்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச–25)

**காணி விற்பனைக்கு**

K.K.S. றோட் மல்லாகம் (J-214) 2 1/4 பரப்பு
(பழைய சோடா கொம்பனி ஒழுங்கை அருகில்)
விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
(CS/54608) J-1

**T.P: 077 753 2994**

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாண நகரில் உள்ள
பிரபல்யமான புத்தகசாலைக்கு
விற்பனை உதவியாளர்
தேவை.
உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.
(Cs/58869) J-1

**077 663 9304**

**காணி விற்பனைக்கு**

யாழ். சுண்டுக்குளி மொறிஸ்
ஒழுங்கையில் பிரிக்கப்பட்ட
காணித்துண்டுகள்
விற்பனைக்கு உண்டு.
இடைத்தரகர்கள் தேவையில்லை
(CS/55882) J-1

**076 156 2983**

## விறகு கொள்வனவிற்கான கூறுவிலை கோரல்

எமது சங்கத்துக்கு 200 தூக்கு (20000 கிலோ) நன்றாக காய்ந்த புறவெட்டு கலவன் விறகு தேவைப்படுகின்றது. வழங்கக் கூடியவர்கள் தங்களின் கடிதத்தலைப்பில் வழங்கக்கூடிய விறகின் அளவு, ஒரு தூக்கின் பெறுமதி, வழங்கக் கூடிய அளவின் மொத்தப் பெறுமதி என்பவற்றை குறிப்பிட்டு மூடிய கூறுவிலையை "பொது முகாமையாளர், யாழ்மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம்,கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்" என்ற முகவரிக்கு 22.08.2024 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைத்தல்

கூட்டுறவு சேவையில் உள்ள
பொது முகாமையாளர்
0774215155

## அறிவித்தல்

ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம் அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்தினால் நடாத்தப்படும் வருடாந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டு 01.11.2024 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆலயத்தில் சீட்டிழுப்பு இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபை
077 076 0511, 076 904 9128
(CS/28283) J-1

# கேள்வி அறிவித்தல்
## சபை நிதி 2024 (கட்டம் III)
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

1. வலி தெற்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **செயலாளர், வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி இல: 021-2240017, தொலைநகல் 021-2240327)** எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை **2024.08.08 - 2024.08.21 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையில் சமர்ப்பித்து ரூ. 3,500.00** மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் **(மூலம், பிரதி) 2024.08.22ந் திகதி 10.30 மணிக்கு முன்னர் தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மு.ப 10.30 மணிக்கு 2024.08.15 அன்று நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை வரி நீங்கலாக (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் (நாட்கள்) | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம் |
| 01. | NP/14/41(15)/02/05/CF/2024/33 | தொகுதி A<br>1. குமாரசாமிப் புலவர் முதலாம் ஒழுங்கை புனரமைப்பு<br>2. காளிகோவில் வீதி முதலாம் ஒழுங்கை புனரமைத்தல்<br>3. பூவோடை 5ம் குறுக்கு வீதி புனரமைத்தல் | 4.36 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 24.10.2024 | 44,000.00 | 21.11.2024 வரை |
| 02. | NP/14/41(15)/02/05/CF/2024/34 | தொகுதி B<br>1. அம்பலவாணர் வீதி புனரமைத்தல் (மிகுதி வேலை)<br>2. லயன் எஸ். மகாதேவா வீதி புனரமைத்தல் (கல்லூரி வீதி) | 2.84 | 60 | C7 and C8 (வீதிகள்) | 63 | 24.10.2024 | 29,000.00 | 21.11.2024 வரை |
| 03. | NP/14/41(15)/02/05/CF/2024/35 | தொகுதி C<br>1. மானிப்பாய் குறுக்கு வீதி புனரமைத்தல் (மிகுதி வேலை)<br>2. சேர் பொன் இராமநாதன் ஒழுங்கை | 3.20 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 24.10.2024 | 32,000.00 | 21.11.2024 வரை |
| 04. | NP/14/41(15)/02/05/CF/2024/36 | தொகுதி D<br>1. மயிலங்காடு கிழக்கு ஞானவைரவர் வீதி கிளை ஒழுங்கை<br>2. குப்பிளான் கடகடம்பை விவசாய வீதி கிளை ஒழுங்கை புனரமைத்தல் | 2.69 | 60 | C7 and C8 (வீதிகள்) | 63 | 24.10.2024 | 27,000.00 | 21.11.2024 வரை |
| 05. | NP/14/41(15)/02/05/CF/2024/37 | இணுவில் சந்தை கடை புனரமைத்தல் | 2.54 | 60 | C7 and C8 (கட்டடம்) | 63 | 24.10.2024 | 26,000.00 | 21.11.2024 வரை |

"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VATமற்றும் வேறுவரிகள்) 50 மில்லியனினுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) பின்பற்றப்படும்".

தலைவர்
உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,
வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.
08.08.2024

(CR/43087) J-1

# காணிகள் அபகரிப்பு: உரிய தீர்வு வேண்டும்

## மன்னார் பிரஜைகள் குழு கோரிக்கை

**மன்னார், ஒக. 8**

**மன்னார் மாவட்டத்தில் பல்வேறு கோணங்களில் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு வருகின்ற போதும், இதுவரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கவில்லை. மக்கள் எதிர்நோக்கும் சகலவிதமான பிரச்சினைகளுக்கும் நாட்டின் ஜனாதிபதி உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மார்க்கஸ் அடிகளார் தெரிவித்தார்.**

மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மன்னார் மாவட்டத்தில் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக கனிய மணல் அகழ்வுத் திட்டத்தை முன்னெடுப்ப தற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. மக்கள் சார்பாக பொது அமைப்புகள் பல்வேறு எதிர்ப்புகளைத் தெரிவித்து வருகின்ற போதும், பல அரச நிறுவனங்களின் முயற்சியுடன் இவ்வாறான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

32 அரச திணைக்களங்களின் உதவியுடன் எதிர்வரும் 14 ஆம் திகதி கனிய மணல் அகழ்வு செய்யப்படவுள்ள இடங்கள் நில அளவீடு செய்யப்படவுள்ளன. இதை மன்னார் மாவட்ட மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து முழுமையாக எதிர்க்க உள்ளோம்.

சுமார் 4 ஆயிரதுக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் காணிகள் இன்றி வாழ்ந்து வருகின்றனர். இளையோர் உட்பட 800 இற்கும் மேற்பட்டவர்கள் சிறுதொழில் முயற்சிக்காக காணியை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்துள்ளனர். எனினும் அதற்கான எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதேநேரம் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக இப்பகுதிகளில் விவசாயம் செய்து வாழும் மக்களுக்கு காணிகள் வழங்கப்படவில்லை. உரிய அதிகாரிகள் தலையிட்டு மக்களுக்கு அக்காணியை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

(ஒ-25,56)

International
Education Expo 2024
IMC|AIC CAMPUS
உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் உங்கள் பட்டப்படிப்பினை தொடர்வதற்கான அரிய வாய்ப்பு
- Medicine
- Computing
- Engineering
- Aircraft Maintenance



எமது IMC|AIC Campusஇனால் நடாத்தப்படும் இலவசகருத்தரங்கில் பங்குபற்றி மேலதிக விபரங்களை பெற்றிடுங்கள்
SATURDAY 10th AUG
Tilko Hotel Jaffna
10am to 4pm
மேலதிக தொடர்புகளுக்கு 074 133 5511
400/4, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ்ப்பாணம்.



ஏழாலை புங்கடி புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவ முத்தேர் பவனி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ரி-66)



# தவறிழைத்தோர் தண்டிக்கப்படுவர்

## மன்னார் மருத்துவமனை பணிப்பாளர் உறுதியளிப்பு

மன்னார், ஒக. 8

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் இளம் தாய் ஒருவர் சிகிச்சையின்போது பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் தொடர்பில் தவறிழைத்தோர் அடையாளம் காணப்படும் பட்சத்தில் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள். இவ்வாறு மன்னார் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் அஸாத் எம் ஹனீபா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சம்பவம் தொடர்பில் வடமாகாண சுகாதார அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட சுயாதீன விசாரணைக் குழுவின் விசாரணைகள் நிறைவ டைந்துள்ளன. இதில் சம்பவ தினத்தின்போது சிலர் தவறிழைத்துள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக விசேட அறிக்கை வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு மேலதிக நடவடிக்கைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் மத்திய சுகாதார அமைச்சின் விசாரணைக் குழு ஒன்று மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

மத்திய சுகாதார அமைச்சின் விசாரணைகள் முடிவடைந்தவுடன் தவறிழைத்தவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார்.

(ச-56,60)

# பஜனை நிகழ்வு





யாழ்ப்பாணம், ஓக. 8

வடமராட்சி, தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்தப் பெருவிழாவை முன்னிட்டுச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வடபிராந்திய சாயி சமித்தி நிலைய அன்பர்களின் பஜனை நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மு.ப. 10 மணி தொடக்கம் மு.ப. 11.45 மணி வரை இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்.ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய அதிபர் செ.பரமேஸ்வரன் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை ஆற்றினார்.

(ஒ-45,66)

# இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஓக. 8

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் யாழின் பிரபல மருத்துவ நிபுணர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளதாகவும், மருத்துவ முகாமில் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற முடியுமெனவும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஒ-66)

இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பாக புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில், வடமாகாணத்துக்கான 2025-2029 ஆம் ஆண்டு வரையான தேசிய ஊழல் ஒழிப்புத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக பல்வேறு தரப்பினரின் கருத்துகளை உள்வாங்கும் கலந்துரையாடல் கிளிநொச்சியிலுள்ள தனியார் விருந்தகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. (ச-25,113)



# கௌதாரிமுனைப் பகுதியில் மணலகழ்வை நிறுத்துங்கள்

## பூநகரி மக்கள் போராட்டக் குழு ஆளுநருக்குக் கடிதம்

**கிளிநொச்சி, ஓக. 8**

**கிளிநொச்சி, பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கௌதாரிமுனை மற்றும் பரமன்கிராய் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் மணலகழ்வுக்கென வழங்கப்பட்டுள்ள அனுமதி உடனடியாக நிறுத்தப்பட்டு மக்களது கிராமங்கள் பாதுகாக்கப்படவேண்டும். தவறுமிடத்து வீதிக்கிறங்கி போராட்டத்தின் மூலம் அரச அலுவலகங்களை முடக்க நேரிடும்.**

-இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநருக்கு பூநகரி மக்கள் போராட்டக் குழு கடிதமொன்றை அனுப்பி சுட்டிக்காட்டியுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:-

இந்தப் பகுதிகளில் நீதிமன்றால் தடைவிதிக்கப்பட்டிருந்த மணல் அகழ்வு தற்போது கனியவள திணைக்கள அதிகாரிகளது பங்கெடுப்புடன் பெருமெடுப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாள் தோறும் நூற்றுக்கணக்கிலான டிப்பர்கள், கனரக வாகனங்கள் மூலம் மணல் வெளியிடங்களுக்குக் கொண்டுசெல்லப்படுகின்றது.

இதனால் கௌதாரிமுனை மற்றும் பரமன்கிராய் ஆகிய இருகிராமங்களும் அடுத்துவரும் ஓரிரு வருடங்களில் இல்லாது போய்விடும் அபாயம் தோன்றும்.

எனவே இந்த மணல் அகழ்வுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிகள் உடனடியாக இடைநிறுத்தப்பட்டு மக்களது கிராமங்கள் பாதுகாக்கப்படவேண்டும். தவறுமிடத்து கிளிநொச்சி மாவட்டம் தழுவி வீதிக்கு இறங்கி மிகப்பெரிய போராட்டத்தை முன்னெடுப்போம் - என்றுள்ளது. (ச-25,20,125)



# மரதன் ஓட்டம்

முல்லைத்தீவு, ஓக. 8

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மரதன் ஓட்டப்போட்டி முல்லைத்தீவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

போட்டியில் முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை மாணவன் ஜெ.விதுஷன் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டார்.

கல்வித் திணைக்கள மாகாண உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் கலந்துகொண்டார். (ச-25,13)

# பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கவேண்டும்

## மன்னார் மாவட்ட பொது அமைப்புகள் கோரிக்கை

மன்னார், ஓக. 8

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் இளம் தாய் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் மருத்துவமனை தரப்பினர் நீதியுடன் நடந்து கொள்ளவேண்டும். அநீதி இழைக்கப்பட்டிருந்தால் பக்கச்சார்பின்றி தண்டனையளிக்கப்படவேண்டும்.

-இவ்வாறு மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

நான்கு விதமான முதற்கட்ட விசாரணைகள் தற்போது முடிவடைந்துள்ளன. அடுத்த கட்டமாக மத்திய சுகாதார அமைச்சினால் இவ்வாரம் மன்னார் மாவட்ட மருத்துவமனைக்கு விசாரணைக் குழு வருகை தந்து முதற்கட்ட விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளனர். சம்பவ தினத்தன்று கடமையில் இருந்தவர்கள் அசண்டையீனமாக நடந்து கொண்டுள்ளார்கள் என சிலரைக் குற்றவாளிகளாக, குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக அடையாளமிட்டுள்ளார்கள்.

அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் . பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் கிடைக்க வேண்டும்.

கவனயீனமான செயற்பாட்டால் ஒரு மரணம் நிகழ்ந்துள்ளது. பிறந்த பிள்ளையின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

கடந்த காலங்களில் கூட மருத்துவத்துறைக்கு எதிராக தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. கிளிநொச்சியில் பெண்ணின் கர்ப்பப்பை அகற்றப்பட்ட விசாரணை அப்படியே காணாமல் போய் விட்டது.

யாழ்ப்பாணத்தில் சிறுமி ஒருவரின் கை அகற்றப்பட்டமை தொடர்பான விவகாரம் பேசு பொருள் அற்றுப் போய்விட்டது. எனவே மன்னார் விடயத்திலும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நீதியும், நியாயமும் கிடைக்க வேண்டும்- என்றார். (ச-56)

# மேலதிக பஸ் சேவை மன்னாருக்கு நடத்துக

மன்னார், ஓக. 8

மன்னார் ஏ-32 வீதியூடாக பேருந்தில் பயணிப்பவர்கள் வார நாட்களில் காலைநேரப் பயணத்தின் போது பெரும் நெருக்கடியைச் சந்திக்க வேண்டியுள்ளது என்று அரச ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழிலிருந்து சிப்பியாறு புனித ஸ்தலத்துக்கு வழிபாட்டுக்காகச் செல்லும் பெருந்திரளான யாத்திரியர்கள் மற்றும் மன்னார் மாவட்டத்தில் பணிபுரியும் அரச ஊழியர்கள் ஆகியோர் அதிகளவில் காலை வேளையில் பயணிக்கின்றனர்.

எனவே, நெருக்கடியைக் குறைக்கும் வகையில் மேலதிகமாக பஸ் சேவை ஒன்றை நடத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25,159)

# இழப்பீடு தாருங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக. 8

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் கடந்த ஆண்டு 2023 காலபோக நெற்செய்கையின் போதான நெல் அழிவுகளுக்கான இழப்பீடுகள் தமக்கு கிடைக்கப் பெறவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

புதுக்குடியிருப்பு கமநலசேவை நிலையத்தின் கீழ் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கே காப்புறுதி செய்தும் இழப்பீடுகள் இன்னும் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச -25,13)

# மூடிய பாடசாலைகளை இயங்க வையுங்கள்!

## கிளிநொச்சி மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஓக. 8

கிளிநொச்சி மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளை இயங்க வைப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர்ச் சூழல், உவரடைதல் போன்ற காரணங்களால் கிளிநொச்சியில் 8 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. பூநகரி கல்விக் கோட்டத்தில் 6 பாடசாலைகளும் கரைச்சிக் கல்விக் கோட்டத்தில் 2 பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலைகளை பொருத்தமான இடங்களில் இயங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யுங்கள் என கல்வி அதிகாரிகளிடம் கடந்த 15 ஆண்டுகளாக கோரிக்கை முன்வைத்து வருகிறோம். எனவே பாடசாலைகளை இயக்குவதற்கான விரைவான நடவடிக்கைகளை கல்வி அதிகாரிகள் எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-13)

# உள்ளகப் பயிற்சிக்கு உள்ளீர்க்கவில்லை

## யாழ். சித்த மருத்துவ மாணவர்கள் கவலை

யாழ்ப்பாணம், ஓக. 8

ஆயுள்வேத இரண்டாம்கட்ட உள்ளகப்பயிற்சிக்காக காத்துக்கொண்டிருந்த 109 மாணவர்களில் 48 மாணவர்களின் பெயர்ப்பட்டியலே இதுவரை வெளியிடப்பட்டுள்ளது.

ஏனைய 61 மாணவர்களையும் உள்ளடக்குவதாக கடந்த மாதம் ஆயுள்வேத ஆணையாளர் தெரிவித்திருந்த போதிலும் எமது பெயர்ப்பட்டியல் இதுவரை வெளியிடப்படவில்லை என்று 34 ஆவது அணி மாணவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள்மேலும்கூறுகையில், சுகாதார அமைச்சரிடம் இது குறித்து கலந்துரையாடிய போது நிதி நிலைமை மோசமாக இருப்பதால் கட்டம் கட்டமாக உள்வாங்கப்படுவார்கள். ஜூலை இறுதிப்பகுதியில் உள்ளடக்கப்படுவீர்களென குறிப்பிட்டிருந்தார்.

கடந்த ஜூலை உள்ளகப்பயிற்சியை எதிர்பார்த்த 109 மாணவர்களில் 48 மாணவர்களின் பெயர்ப்பட்டியல் மாத்திரமே வெளியிடப்பட்டதுடன் யாழ். சித்தமருத்துவ 34 ஆம் அணியின் 61 மாணவர்களின் பெயர்ப்பட்டியல் இதுவரை வெளியிடப்படவில்லை.

உள்ளகப்பயிற்சியை நிறைவு செய்தால் தனியார் கிளினிக் மூலம் எமது மருத்துவ சேவையை நாட்டுக்கு வழங்க முடியும். எம் குடும்பத்தின் பொருளாதார சுமையை நாமே சுமக்க வேண்டியுள்ளது. எனவே எமது வயதைக் கருத்தில் கொண்டு எமக்கான தீர்வை சம்பந்தப்பட்ட தரப்பினர் பெற்றுத் தரவேண்டும்- என்றனர். (ச-20)

### 27 வருடங்களின் பின்னர்

# இந்தியாவை வீழ்த்தி இலங்கை புது எழுச்சி




இலங்கை – இந்திய அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடரில், 27 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவைத் தோற்கடித்து இலங்கை அணி புது எழுச்சியைப் பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 7 விக்கெட்களை இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அவிஸ்க பெர்ணான்டோ 96 ஓட்டங்களையும், குசல் மெண்டிஸ் 59 ஓட்டங்களையும், பதும் நிசங்க 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி வெறும் 138 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 110 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ரோகித் பெற்ற 35 ஓட்டங்களே அதிகபட்சம். வெல்லாலகே 5 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

கடந்த 27 வருடங்களுக்கு முன்னர் இந்திய அணியை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றிய பின்னர், தற்போது தான் இலங்கை அணி மீண்டும் ஒருதடவை இந்திய அணியை இருதரப்புத் தொடரில் வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

---

## மதப்...

ஓய்வுபெற்ற முப்படையினர் கூட்டமைப்பின் தேசிய மாநாடு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மக்கள் விடுதலை முன்னணி என்ற வகையில் நாட்டில் நிலவிய உண்மையான பிரச்சினைகள் பற்றி பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றி மக்களுக்குச் சரியான விடயங்களை எடுத்துரைத்தோம். எனினும் சிலர் உருவாக்கிய இனவாத அரசியல் ஏனைய எல்லா விடயங்களையும் மூடிமறைத்து முழு நாட்டினதும் கவனத்தை யுத்தத்தின் பால் வழிப்படுத்தியது.

1948 ஆம் ஆண்டில் பெருந்தோட்ட மக்களின் குடியுரிமை நீக்கப்பட்டது. 1956 ஆம் ஆண்டில் ஒரு பிரச்சினையை உருவாக்கி 1958ஆம் ஆண்டில் 'ஸ்ரீ' எழுத்தை அழித்தார்கள். 1965ஆம் ஆண்டில் இனவாதத்தை ஊக்குவிக்கும் பேரணிகள் நடத்தப்பட்டன. இவ்வாறாக இவர்கள் (சிங்கள ஆட்சியாளர்கள்) செய்த அத்துமீறல்கள் நீட்சியானவை. இதன் தொடர்ச்சியாக 1981ஆம் ஆண்டு யாழ். நூலகத்தை தீக்கிரையாக்கினார்கள். யாழ். மக்களின் ஆன்மீக பிணைப்பு நிலவிய நூலகத்தை தீக்கிரைக்காக்கும் போது அவர்களுடைய இதயங்கள் வெடித்துச் சிதறமாட்டாதா?

1983ஆம் ஆண்டில் கறுப்பு ஜூலை உருவாக்கப்பட்டது. 1982ஆம் ஆண்டில் நடத்தப்படவிருந்த பொதுத்தேர்தல் முறைப்படி நடத்தப்பட்டிருந்தால் யாழ் .மக்களின் குரல் நாடாளுமன்றத்தில் ஒலித்திருக்கும். எனினும் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தன்னுடைய 5/6 பெரும்பான்மை அதிகாரத்தை பேணிவரச் செயலாற்றியதன் காரணமாக வடக்கில் ஆயுதப் போராட்டத்துக்கு அது வழிசமைத்தது. இதுவே, 1983ஆம் ஆண்டில் கறுப்பு ஜூலை காரணமாகவும் தற்கொலைக் குண்டுதாரிகள் உருவாகுவதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

1999ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் டவுன் ஹோல் குண்டு வெடிப்புக் காரணமாகவே சந்திரிகா ஜனாதிபதியாகினார். 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் யுத்தமே முக்கியமான இடம் வகித்தது. 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த கௌரவத்துக்காக இரண்டாவது தடவையாகவும் மஹிந்த ஜனாதிபதியாக்கப்பட்டார். சரத் பொன்சேகா ஜனாதிபதி வேட்பாளராக வரும் யுத்தத்திற்கு தலைமைத்துவம் வழங்கியதாலேயே.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு பின் உருவாக்கிய குண்டுப்பீதி காரணமாகவே கோத்தாபய ஜனாதிபதியானார். அவர்கள் யுத்தத்தை உருவாக்கி நீண்டகாலமாக அவர்களின் இருப்பினை உறுதிசெய்து கொண்டாலும் இப்போது ரணிலும் மஹிந்தவும் யுத்தம் இல்லாமல் போனதால் சோர்வடைந்திருக்கிறார்கள். மீண்டும் ஒரு மதப் பூசலை ஏற்படுத்துவதற்காக வடக்கிலும் தெற்கிலும் முயற்சி செய்து வருகிறார்கள் என்பது எமக்குத் தெரியும். அதனாலேயே அவர்களுக்கு தேசபந்து வேண்டும். அவர்கள் ஒருபோதுமே யுத்தத்தில் பாதிப்படைந்தவர்களாக மாறாமல் தமது அரசியலுக்காக அதனைப் பயன்படுத்தி வந்தார்கள்.

யோஷித்த ராஜபக்சவை கடற்படையில் சேர்த்துக் கொள்வதற்காக அதுவரை ஆட்சேர்ப்புக்கு இருந்த குறைந்த பட்ச தகைமையை குறைத்தார்கள். அத்துடன் நின்று விடாமல் பிரிட்டனில் ஒரு பாடநெறிக்காக ஒரு கோடியே எண்பது இலட்சம் ரூபா பொதுப்பணத்தைச் செலவிட்டார்கள். அதன் பின்னர் உக்ரைனுக்கு ஒரு பாடநெறிக்காக அனுப்பி 36 இலட்சம் ரூபாவுக்கு கிட்டிய பொதுப் பணத்தைச் செலவிட்டார்கள். அதன் பின்னர் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுடன் அவரை இணைத்து 27 தடவைகள் வெளிநாடு செல்வதற்காக வாய்ப்பளித்தார்கள். இந்த நாட்டில் சாதாரண பெற்றோரின் பிள்ளைகள் யுத்தத்திற்கு பலியாகின்றவேளையில்அவர்களின்பிள்ளைகள் யுத்தத்தின் பயனாளிகளாக மாறினார்கள். வடக்கிலுள்ள தாய், தந்தையர்களும் தமது பிள்ளைகள் தொடர்பில் இன்னமும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்" - என்றார். (அ-ம)

## வடக்கு...

நீதி அமைச்சருமன விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பெரமுனக் கட்சியினர் என்னை தமது கட்சியின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிட அணுகி இருந்தனர். நான் அதனை மறுத்தேன். தற்போது இளம் அரசியல்வாதியொருவரை வேட்பாளராகக் களம் இறக்கியுள்ளனர். சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதே எனது இலக்கு. எனது பெயரிலும் ராஜபக்ச உள்ளமையால் நான் முந்தைய அரசாங்கத்தின் ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்தவன் அல்ல. அந்த ராஜபக்ச குடும்பத்துக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. நாட்டு மக்களுக்கும் இந்த அரசாங்கத்துடன் தொடர்புடையவராகவே என்னைத் தெரியும். ஆனால், நான் நீதியமைச்சராக சுயாதீனமாகவே இயங்கினேன்.

தற்போதுள்ள அரசாங்கத்தின் மீது மக்கள் முற்றிலும் நம்பிக்கை இழந்துள்ளமையை நான் அறிவேன். அதனால் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் தற்போது நாடாளுமன்றில் இருக்கின்றவர்களில் 150க்கும் மேற்பட்டவர்கள் தோற்கடிக்கப்படுவார்கள்" - என்றார். (அ-ம-26)

## மீளக்...

நடைபெற்றது. 2023ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை இந்தியாவிலிருந்து மீளக்குடியமர்ந்த 83 குடும்பங்களில் ஆய்வின் மூலம் காணி, வாழ்வாதாரம் உட்பட்ட தேவைப்பாடுகளை எதிர்நோக்கிவரும் இனம் காணப்பட்ட 23 குடும்பங்களுக்கு வழங்க வேண்டிய தேவைகள் மற்றும் சேவைகள் அதனைப் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகள் குறித்த கலந்தாய்வானது தொடர்புடைய திணைக்களங்களுடன் இடம்பெற்றுப் பயனாளிகளுக்கான தீர்வு மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டது.

மீளக் குடியமர்ந்தவர்களுக்கான காணி மற்றும் அடிப்படைத் தேவைகளை முழுமையாகத் தீர்க்க முடியாவிட்டாலும் கட்டம் கட்டமாகத் தீர்க்கலாம் எனவும், தொடர்புடைய திணைக்களங்களின் ஒத்துழைப்பினை வழங்குமாறும் இக்கலந்தாய்வில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்டப் பதில் செயலர் பிரதீபன் கேட்டுக்கொண்டார்.

இந்தக் குடும்பங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வினைக் காலக்கிரமத்தில் தொடர்புடைய திணைக்களங்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-ம-66)

## மருத்துவர்...

நிர்வாகம் மன்னார் பொலிஸ் நிலையத்தில்செய்த முறைப்பாடுகளைத்தொடர்ந்து மருத்துவர் அர்ச்சுனா கைது செய்யப்பட்டிருந்தார். நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட அவர் நேற்றுப் புதன்கிழமை வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, மருத்துவர் அர்ச்சுனா கடுமையான நிபந்தனைகளுடன் சரீரப்பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார்.

அண்மையில் மன்னார், தம்பன்னைக் குளத்தைச் சேர்ந்த இளம் தாய் ஒருவர் மரணம் அடைந்த சம்பவம் தொடர்பில் மருத்துவமனைக்குள் அத்துமீறி நுழைந்து தகவல்களைக் கோரியமை மற்றும் வீடியோப் பதிவுகளை மேற்கொண்டமையைத் தொடர்ந்து மருத்துவர் அர்ச்சுனா கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-213-60)

## கைகலப்பில்...

கொடுத்தவரும் அவருடைய சகோதரனும் நீர்கொழும்பைச் சேர்ந்த நபரை (பணத்தைப் பெற்றுக்கொண்டவரை) யாழ்ப்பாணத்துக்கு அழைத்து அவர் மீது தாக்குதல் நடத்தி ஐந்து இலட்சம் ரூபா பணத்தை திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான நபர், மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டைத் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சந்தேகநபர்களைக் கைதுசெய்து நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்திய போதே அவர்களை எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (அ-ம-27)

## பொன்சேகா...

சென்ற முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, அங்கு முக்கியத்துவமிக்க சந்திப்புகளை நடத்திவிட்டு நேற்று மாலை நாடு திரும்பினார்.

இந்த நிலையிலேயே தனது அடுத்தக்கட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பில் நாளை வெள்ளிக்கிழமை அவர் விசேட அறிவிப்பொன்றை வெளியிடவுள்ளார் என்று தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## கொடுக்குளாயில்...

யில் சென்றுவிட்டு, பின்னர் வந்து பார்த்தபோதே வீட்டுக்குத் தீவைக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-27)

## செம்மணியில்...

மாகவுள்ள நிலையில், இதை முன்னிட்டு யாழ்ப்பாணம், செம்மணியில் அமைந்துள்ள நல்லூரரான் வளைவில் சேவற்கொடி ஏற்றும் சம்பிரதாய நிகழ்வு இன்று நண்பகல் இடம்பெறவுள்ளது. (அ-ம-66)

# ரஷ்யாவுக்குள் ஊடுருவியது உக்ரைன்

## பணியாளர் தேவை



யாழ். நகரின் மையத்தில் இயங்கும் பத்திரிகை நிறுவனத்திற்கு
**1. அச்சு இயந்திர இயக்குநர் (மெசின் மைன்டர்)**
**2. அச்சு இயந்திர உதவியாளர் தேவை.**
**பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.**
வெளி மாவட்டத்தினருக்கு தங்குமிட வசதி உண்டு.

ஆர்வம் உள்ளவர்கள் நாளை **08.08.2024 காலை 9.00 மணிமுதல் பி.ப 01.00 மணிவரை** நேரில் சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**கீவ், ஓக. 8**

**ரஷ்ய எல்லைக்குள், உக்ரைன் படைகள் சுமார் 10 கிலோமீற்றர்கள் தூரம் ஊடுருவிச் சென்று கடுந் தாக்குதல்களை நடத்தியுள்ளன என்று உக்ரைன் புலனாய்வுப் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.**



கருங்கடலின் வடக்குப் பகுதி ஊடகவும், கேர்க்ஸ் பிராந்தியத்தின் எல்லைக் கிராமங்கள் வழியாகவுமே இந்த ஊடுருவல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 11 ராங்கிகள் மற்றும் 20க்கும் மேற்பட்ட கவச வாகனங்கள் மூலம் உக்ரைன் படைகள் ரஷ்யாவுக்குள் ஊடுருவி ரஷ்ய இராணுவத்தினர் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தியுள்ளதாகவும் உக்ரைனின் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

உக்ரைன் படைகளின் தாக்குதல்கள் காரணமாக, ரஷ்யாவின் முன்களம் ஆட்டம் கண்டுள்ளதுடன், பலநூறு ரஷ்ய இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், ரஷ்யாவின் ராங்கிகள், இலத்திரணியல் போர்க் கருவிகள் என்பன அழிக்கப்பட்டுள்ளதாகவும் உக்ரைனின் புலனாய்வுப் பிரிவு தனது தகவலில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால், உக்ரைனின் ஊடுருவலை ஏற்றுக் கொண்டுள்ள ரஷ்யா, பாதிப்புகள் உக்ரைன் குறிப்பிடுவதுபோல அமையவில்லை என்றும், குடியிருப்புத் தொகுதிகளே தாக்குதலுக்கு இலக்கானதாகவும், ரஷ்யப் படைகளுக்கு எந்தச் சேதமும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்துள்ளது. எவ்வாறிருப்பினும், கடந்த இரண்டு வருடங்களாக இடம் பெற்றுவரும் உக்ரைன் ரஷ்ய மோதல்களில் உக்ரைன் படையினர் 10 கிலோமீற்றர் தூரமளவுக்கு ரஷ்யாவுக்குள் ஊடுருவித் தாக்குதல்களை நடத்தியிருப்பது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 19 . 04 . 1933 |  | 02 . 08 . 2024 |

**இன்பநாதன் கிறிஸ்தீன்னம்மா (தங்கரத்தினம்)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இன்பநாதன் கிறிஸ்தீன்னம்மா (தங்கரத்தினம்) அவர்கள் கடந்த (02.08.2024) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை-இராசமணி தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான அந்திரேஸ்-மங்களம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அந்திரேஸ் இன்பநாதன் அவர்களின் அன்பு மனைவியும் எவெரெஸ்ட் செல்வராஜா (பிரித்தானியா), திரேசா வையிலற் (வேவி-இலங்கை), றெஜினோல்ட் ஜெயராஜா (பிரான்ஸ்), மரிய இசிடோறா (பவா-பிரித்தானியா), டக்ளஸ் ஆனந்தராஜா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயந்தி (பிரித்தானியா), காலஞ்சென்ற அல்பிரட் யோகராஜா, யசி (பிரான்ஸ்), சூரியகுமார்(பிரித்தானியா), விஜி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான ஜீவரத்தினம், டொன்பொஸ்கோ, யோசப் சேவியர் மற்றும் மேரிறோசலின் (மலர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பற்றிக்-சரண்யா (பிரித்தானியா), ஸ்ரிவன்-ரமீஸ்கா (பிரித்தானியா), பற்றீசியா-கீரன் (பிரித்தானியா), தர்ஷினி (சமி)-சுரேஸ் (பிரித்தானியா), தர்மினி (பமிலா)-அன்ரன் விமல்ராஜ் (பிரித்தானியா), நிஷாந்தினி (ஆசிரியை கார்மேல் பாலர் பாடசாலை)-யோய் ஜயந்தன் (பனை அபிவிருத்திச் சபை, இலங்கை), சுதர்ஷன் (பிரான்ஸ்), யாழினி-தயாபரன் (பிரித்தானியா), நிஷாந்தியா-தரோன் (பிரான்ஸ்), அன்றியா (பிரான்ஸ்), கிளொடியா- சுதாகரன் (பிரித்தானியா), கிறி (பிரித்தானியா), யூலியா-றொகான் (பிரித்தானியா), அலெக்ஸ் (ஜேர்மனி), ஹறி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், எய்டன் (பிரித்தானியா), கியானா (பிரித்தானியா), லக்ஷ்மி (பிரித்தானியா), நிஷான் (பிரித்தானியா), ஏரோன் (பிரித்தானியா), அஸ்ரன் (பிரித்தானியா), டெறிக் (இலங்கை), நிலோன் (இலங்கை), தஷ்வின் (பிரித்தானியா), தஷ்வியா (பிரித்தானியா), தர்வின் (பிரித்தானியா), லேனா (பிரான்ஸ்), மிலா(பிரான்ஸ்), சாய்லன் (பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08-08-2024) வியாழக்கிழமை பி.ப 03:00 மணியளவில் புனித திருமுழுக்கு ஜோவான் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல 2, இராசாவின்**
**தோட்ட ஒழுங்கை**
**யாழ்ப்பாணம்.**

(CS 1087) J-1

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 772 1334**

பங்களாதேஷின்

## இடைக்காலத் தலைவராக முகமட் யூனுஸ் நியமனம்!



டாக்கா, ஓக. 8

பங்களாதேஷின் இடைக்காலத் தலைவராக ஷேக் ஹசீனாவின் நீண்ட கால அரசியல் எதிராளியும் நோபல் பரிசுபெற்றவருமான முகமட் யூனுஸ் நியமிக்கப்பட் டுள்ளார்.

ஹசீனா பங்களாதேஷிலிருந்து வெளியேறியுள்ள நிலையிலேயே 84 வயது யூனுஸ் இடைக்காலத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். யூனுஸ் தனது நுண்கடன் திட்டங்களுக்காக சர்வதேச அளவில் வரவேற்பைப் பெற்றவர். அதற்காக நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் ஹசீனா அவரை பொதுமக்களின் எதிரி என கருதினார். யூனுஸ் தற்போது ஆறு மாத பிணையில் உள்ளார்.

ஹசீனாவை பதவியிலிருந்து வெளியேற்றுவதற்காக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட மாணவர்கள் யூனுசின் பெயரை இடைக்காலத் தலைவராக முன்மொழிந்திருந்த னர். (எ-இ)

**வங்கி மீதி வசதி**
**(SHOW MONEY)**
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
**074 173 7684**
(CS/988) J-1

**வேலைக்கு ஆட்கள் தேவை**
கட்டட நிர்மாணத்துறைக்கு வேலைக்கு ஆட்கள் தேவை
➤ மேசன் ➤ கூலி
தொடர்புகளுக்கு:
**076 760 0403**

**மணமகள் தேவை**
1993,இந்து,அனுஷம், Electrical Engineer, 7ல் செவ்வாய்
working place-Colombo
Address-Chunnakam, Jaffna
தொடர்புகளுக்கு:
**076 064 8959, 071 876 7699**

## ரொக்கெட் தாக்குதல்

ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவதளம் மீது மேற்கொள்ளப்பட்ட ரொக்கட் தாக்குதலில் அமெரிக்க இராணுவ வீரர்கள் பலர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஹமாஸ் தலைவர் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பின் தளபதி ஆகியோர் கொலை செய்யப்பட்டமைக்கு பழிவாங்கும் விதத்தில் ஈரானும், ஹிஸ்புல்லா அமைப்பும் தாக்குதலை மேற்கொள்ளக்கூடும் என்ற அச்சத்தின் மத்தியிலேயே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது. (எ-இ)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.08. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.